# தேன்தமிழிதழ்

Bergen Tamilsk Avis,
Krohnegården 5b,
5146 Fyllingsdalen,
Norway.

Org.nr: 926 840 320 - ISSN: 2703-8440 (Print ISSN: 2703-8785)




Bergen Tamilsk Avis - no.40 - November 2024 - தேன் தமிழிதழ் - மாத இதழ்- இல.40 கார்த்திகை-2024

## உறவுகளுக்கு வணக்கம்

தேன் தமிழ் இதழ்களின் நாற்பதாவது இதழினை தங்கள் பார்வைக்குத் தருவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். 1960ம் ஆண்டுகளிலிருந்து நோர்வே நாட்டில் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றோம். ஏராளமான கல்விமான்கள், கலைஞர்கள், அரசியல்வாதிகள், விளையாட்டு வீரர்கள், சமூகப் பணியாளர்கள், இலக்கியவாதிகள், ஊடகவியலாளர்கள் என அனைத்துத் தளங்களிலும் சாதனை படைக்கும் ஏராளமான தமிழர்கள் நோர்வே நாட்டில் வாழ்ந்து வருகின்றோம்.

அனைத்துத் திறன்களும், பொதுநல அர்ப்பணிப்பும் நிறைந்திருந்தும், நாம் வாழும் நாட்டுடன் ஒருங்கிணைவதில் பின்தங்கியே வாழ்ந்து வருகிறோம். இந்நாட்டின் செய்திகள், தகவல்கள், நிகழ்வுகள் எவையும் நமது தேனிலும் இனிய தமிழ்மொழியில், இலகு நடையில் எமது வாசகர்களுக்குக் கிடைப்பதில்லை என்ற ஆதங்கம் எம்முள் நிறைந்திருந்தது. அதனடிப்படையில் எமது சிறிய குழுவால் ஆரம்பிக்கப்பட்டது தான் தேன் தமிழ் இதழாகும். அரசியல் சிக்கல்களும், கருத்து முரண்பாடுகளும் நம் மத்தியில் மிக நீண்ட காலமாக தலைவிரித்தாடிக் கொண்டிருப்பது பெரும் சவாலாகவே இருந்தது. இருந்தும் வருகிறது.

இந்த நவீன உலகில் தாய் நாட்டிலிருந்தும், வேறு பல நாடுகளிலிருந்தும் பல மின்னிதழ்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு இதழும் தமக்கென தனி நோக்கங்களைக் கொண்டுள்ளது. அதேபோல் தேன் தமிழ் இதழும் ஆரம்பத்தில் எடுத்துக் கொண்ட நோக்கத்தினையும், குறிக்கோள்களையும், இலக்கையும் தொடர்ந்து கைவிடாது தன்வசப்படுத்தி நேர்த்தியோடு இயங்கிவருகின்றது. இதழ்களுக்கான மரபுகள் மற்றும் விதிகளை கடைப்பிடித்து வருகின்றது. சமுதாய நலன்களைக் கருத்தில் கொண்டு மட்டுமே எமது ஆக்கங்களும், நிழற்படங்களும், சிறுவர் பக்கங்களும் பதிவிடப்படுகின்றன. நீண்டகால நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட தேன் தமிழ் இதழ் தொடர வேண்டும். அதற்கு எமது உறவுகளாகிய தங்களது ஆக்கபூர்வமான விமர்சனங்கள் அவசியமானதாகும். உங்களது ஆக்கங்களையும் அனுப்பி வையுங்கள். பதிவிடக் காத்திருக்கிறோம்.

கடந்த இரு மாதங்களாக தேன் தமிழ் இதழ் தவிர்க்க முடியாத காரணங்களால் வெளியிடப்பட முடியவில்லை. அதற்காக வருந்துகிறோம்.

தொடர்ந்து தேன் தமிழ் இதழ் இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை. இரு மாத இதழாக வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தேன் தமிழிதழ்
*Ansvarlig redaktør: Julius Antoni*
ஆசிரியர்: யூலியஸ் அன்ரனி
தொலைபேசி எண்: (47) 924 63 674
BTA
BERGEN TAMILSK AVIS

# கடைசி மீனவன்

-தமயந்தி-



கடலம்மா உன்னை விட்டு வெகுதூரம் சென்றுகொண்டிருக்கிறேன்
ஆயினும் எனது கரங்களை இறுகப் பற்றியபடி நீ
கூடவே வருவதாகவோர் உச்சிப் பித்தம்

நான் போயாக வேண்டும், போகிறேன். நீ உனது கரையிலேயே இருந்துகொள்
ஆனால், குத்தீட்டி கைவாள் கொண்டு உனது உப்பு முகத்தைக் கிழிக்கவரும்
நீர்ப்பாம்புகளின் உச்சியில் ஓங்கி அறையவேனும் அலைக்கரங்களை உயர்த்து

மீண்டும் உனது கரைக்கு வருவேன் என்பது சாத்தியமற்றும் போகலாம்.
இரவுகளும் பகல்களுமாய் மடியுறங்கிய நாட்கள் நித்திய பேரின்பமானவை.
முத்தங்களால் நிறையப்பெற்ற வாழ்வின் பக்கங்கள் பேறு பெற்றவை

வானத்து நட்சத்திரங்களை விடவும் அதிகமான நட்சத்திரங்களை
உனது மடி திறந்து காட்டிய பகல்கள் ஆசீர்வதிக்கப் பட்டவை.
பாதி முகம் மறைத்த வாடை நிலவொளியின் கீழ் நாமிருவருமாக
மீன்களுக்கு போதித்துக் கொண்டிருக்கையில் மழையோடு கொட்டுண்ட வெள்ளிகள்
வான்திரும்ப மறுத்த கதையை எழுத நினைத்தாலும் ஏலுதில்லை.
அந்த நினைவுகளை நீயாவது அலையிடுக்குகளில் பவுத்திரப் படுத்தி வை.

எனது பயணம் மிக மிக நீளமானதும் தூரமானதும்.
போகிறேனடி.
கடைசி மீனவனாக சபிக்கப்பட்டு விடுவேனோ என்ற அச்சத்தோடு போகிறேன்.



# பொலித்தீன் பாவனையைக் குறைப்போம்! உயிரினங்களைக் காப்போம்!

அம்ரிதா ஏயெம்

## அறிமுகம்:

மனிதர்களினால் சுற்றுச்சூழலில் தவறுதலாகவும் அல்லது வேண்டுமென்றும் விடப்படுகின்ற பொலித்தீன், பிளாஸ்ரிக் கழிவுப்பொருட்களை விலங்குகள் உணவுடன் சேர்த்து உண்ணுவதனால் விலங்குகளுக்கும், மற்றைய உயிரினங்களுக்கும் பாரியளவிலான பாதிப்புக்களை உண்டாக்குகின்றன.

வனசீவராசிகளுக்கும், விலங்குகளுக்கும் அழிவை ஏற்படுத்தும் பிரதான காரணங்களில் இது முக்கியமான ஒன்றாக காணப்படுகின்றது.

## பாதிப்புக்கள்:

இதன் காரணமாக வருடாந்தம் இலட்சக்கணக்கான கடல்வாழ், தரைவாழ் உயிரிகள் இறந்துபோகின்றன. பொலித்தீன் அல்லது பிளாஸ்ரிக் பொருட்களை விலங்குகள் உண்ணும் போது அவை கொண்டுள்ள நச்சுப்பொருட்கள் விலங்குகளில் நோய்களை உண்டாக்குகின்றன. அவைகளின் இனப்பெருக்கத்தையும் பாதிக்கின்றன. அத்துடன் விழுங்கிய பொலித்தீன் விலங்குகளின் இரைப்பையின் பெரும்பகுதியை அடைப்பதால், விலங்குகளின் பசி உணர்வைக் குறைத்து, குறைவான உணவை உண்டு, குறைந்த சக்தியைப் பெற்று, பலவீனமான நிலைக்கு உள்ளாகி மாதக் கணக்காக அல்லது வருடக் கணக்காக வருந்தி உயிரை இழக்கின்றன.



மற்றும் இந்த பொலித்தீன் பிளாஸ்ற்றிக் பொருட்கள் எரிக்கப்படும்போது மனிதனுக்கு தீங்கு விளைவிக்கும் காபனோரொட்சைட்டு, டையொக்சின், பையுரன்ஸ், பொலிநியுக்கிளியர் அரோமற்றிக் ஐதரோகாபன், மற்றும் பல நஞ்சுப் பொருட்களையும் வெளிவிடுகின்றன.

மேற்குறிப்பிட்ட இந்த இரசாயனப் பொருட்கள், மனிதனுக்கு மிகவும் நச்சுத்தன்மை கொண்டவையும், சுவாச நோய், புற்று நோய், இருதய நோய், பிறப்பு குறைபாடுகள், குறைவான நிறையுடைய பிள்ளைப்பேறு போன்றவைகளை மனிதர்களில் ஏற்படுத்துவதோடு, சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், நோயாளிகள் போன்றவர்களில் மேலும் தீவிரமான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன.



## பாதிப்புக்களைக் குறைத்தல்:

பொலித்தீன், பிளாஸ்ற்றிக் பொருட்களினால் உண்டான பாதிப்புக்களைக் குறைக்க முயல்வோம். அதற்கு திண்மக்கழிவு முகாமைத்துவத்தின் 4R அடிப்படை அறிவைப் பயன்படுத்துவோம்.

**1. நிராகரித்தல்** (Refuse):
- பொலித்தீன் மற்றும் பிளாஸ்ற்றிக்கினால் செய்யப்பட்ட பொருட்களை பாவிக்காது விடல்
- சுற்றாடலுக்கு பாதிப்பில்லாததும், இலகுவாக உக்கக்கூடிய முறையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களைப் பாவித்தல்.

**2. குறைத்தல்** (Reduce):
- தேவையானபோது மட்டும் பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருட்களைப் பாவித்தல்

**3. மீள்பாவனை** (Reuse):
- பொலித்தீன், பிளாஸ்ற்றிக்கினால் செய்யப்பட்ட பொருட்களை ஒரு தரம் பாவித்துவிட்டு, வீசாதுவிடல்.
- அந்தப் பொருட்களை மீண்டும் மீண்டும் பயன்பாட்டுக்கு உள்ளாக்கி கழிவுகளைக் குறைத்தல்.

**4. மீள்சுழற்சி** (Recycle):
- கழிவுகளை தரம்பிரித்து சேகரிப்பாளர்களிடம் கொடுத்தல்
- தேவையானபோது அவைகளை மீள்சுழற்சிக்கு உட்படுத்தல்



## முடிவுரை:

மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும், சுற்றுச்சூழலுக்கும் பொலித்தீன், பிளாஸ்ற்றிக் பொருட்கள் பல்வேறு தீங்குகளையும், பாதிப்புக்களையும் ஏற்படுத்துகின்றன.





விலங்குகள் இறந்து உக்கிப்போனாலும், அவை உட்கொண்ட பொலித்தீன் உக்குவதற்கு 1000 வருடங்கள் எடுக்கும் என்பதை மனதிற்கொள்ளுவோம்.

விலங்குகள் பொலித்தீன் உண்ணும் நிலைமைகளை ஏற்படுத்துவதைத் தவிர்ப்போம். எனவே பொலித்தீன், பிளாஸ்ற்றிக் பொருட்களை முற்றாக தவிர்ப்போம், அல்லது அவைகளின் பாவனையைக் குறைப்போம், அல்லது அவைகளுக்கு பதிலான மாற்றீட்டு பொருட்களை பாவிப்போம், பாவித்த பொருட்களை மீள்சுழற்சிக்குட்படுத்துவோம். இந்த உலகத்தினதும், உயிரிகளினதும் நிலவுகைக்கு அது மிக முக்கியமானதாகும். யானை என்பது நடமாடும் காடு.



தனது ஆயுளில் 20 இலட்சம் மரங்களாகின்றது. யானைகளை கொண்டாடுவோம்.
பாடசாலை சுற்றாடல் முன்னோடிக் கழகங்களும், மற்றவர்களும் கொண்டாடத் தயாராவோம். □




கடந்த செப்டெம்பர் 28ம் நாளன்று சனிக்கிழமை திருமறைக்கலா மன்றம் நோர்வே கிளையின் கலைமாலை நோர்வே பேர்கன் நகரில் உள்ள Åsane கலாசார மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.



நிகழ்ச்சி குறிப்பிட்ட நேரத்திற்கு ஆரம்பமாகி, பேர்கன் கத்தோலிக்க ஆன்மீக குருவான Rene Beshman (OMI), பேர்கன் சித்தி விநாயகர் ஆலய குருக்கள் ஆனந்த சர்மா, Farge spill கலை பொறுப்பாளர் Sissel Saue, பேர்கன் வெளிநாட்டவர் அமைப்பின் பிரதிநிதிகள், திருமறைக் கலாமன்ற உறுப்பினர்களான Jacinten. Shalini ஆகியோர் மங்கள விளக்கேற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைத்தனர்.



மங்கள விளக்கேற்றும் வேளையில் மன்றத்து கீதம் ஒலிக்கக்கப்பட்டது. தொடர்ந்து இசை, நடனம், நாடகம் என பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

அரங்கினுள் பன்னாட்டு மக்களும் பார்வையாளர்களாக கலந்து கொண்டதனால், பல மொழி பேசும் மக்களுக்கும் விளங்கும் வகையில் நோர்வேயிய, ஆங்கில, தமிழ் மொழிகளில் நிகழ்ச்சிகள் பற்றிய விளக்கங்களை தொகுப்பாளர் Jeninten Victor மிகவும் சிறப்பாக நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கினார்.

திருமறைக் கலாமன்றத்து தயாரிப்பில் "பறம்பு மலை காவலன் (வேள்பாரி)" நாடகம் மேடையேற்றப்பட்டது. நாடகத்தினை தொம்சன் பாலச்சந்திரன் அவர்கள்



அற்புதமாக நெறிப்படுத்தியிருந்தார். அனைத்து கலைஞர்களும் தமது கலைத்திறனை வெளிப்படுத்தினர்.

மழலைகளின் நடனங்களை "பரதாலயா" மற்றும் "அன்னம்" கலைக் கூடங்கள் வழங்கி சிறப்பித்தன.

பிரதமவிருந்தினராக கலந்துகொண்ட Farge spill கலைப் பொறுப்பாளர் Sissel Saue அவர்கள் மன்றத்து பொறுப்பாளர்களால் பொன்னாடை போர்த்தி, மாலையணிவித்து கௌரவிக்கப் பட்டார். Farge spill என்பது நோர்வேயில் உள்ள பன்னாட்டு கலைஞர்களையும் கொண்டு கடந்த இருபது வருடங்களாக சிறப்பாக இயங்கிவரும் கலைக்கூடமாகும். அக்கலைக் கூடத்தினை கௌரவித்ததில் திருமறைக் கலாமன்றம் நோர்வே கிளை பெருமையடைந்தது.





பேர்கன் கத்தோலிக்க ஆன்மிகத்தந்தை Rene Beshman (OMI) அவர்கள் சிறப்புரை வழங்கினார். அவர் தனதுரையில் தாய் நாட்டில் திருமறைக் கலாமன்றத்தின் செயற்பாடுகள் பற்றியும், அதனது இயக்குனர் அமரர் அருட்தந்தை நீ.மரியசேவியர் அடிகள் எவ்வாறு மன்றத்தினை வளர்த்தார், அதன் வழியாக எவ்வாறு வியத்தகு பணிகளை மேற்கொண்டார் என எடுத்தியம்பினார்.

இடைவேளையின் போது நாவுக்கு சுவையான சிற்றுண்டிகள் பரிமாறப்பட்டன. திருமறைக் கலாமன்றம் நோர்வே கிளையினது கலை செயல்பாடுகள் மேலும் விரிவுபடுத்தப்படும் என்ற பொறுப்பாளரின் சிற்றுரையுடன் நிகழ்வு நிறைவுபெற்றது. □




**2024**ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசை ஜப்பானிய அமைப்பான Nihon Hidankyo இற்கு வழங்க நோர்வே நோபல் குழு முடிவு செய்துள்ளது. ஹிரோஷிமா மற்றும் நாகசாகி மீதான அணுகுண்டு தாக்குதலில் இருந்து தப்பியவர்களால் கட்டப்பட்ட அமைப்பான Nihon Hidankyo என்ற அமைப்பு Hibakusha என்றும் அழைக்கப்படுகிறது. அணு ஆயுதங்கள் இல்லாத உலகத்தினை உருவாக்க இவ்வமைப்பு முழுமுயற்சி எடுத்து வருவதாகவும், அதனது தாக்கங்களை உலகுக்கு எடுத்துக்கூற முழுஅளவில் உழைத்து வருவதற்காகவும் நோபல் விருதினை வழங்குவதாக நோபல் பரிசுக்குழு அறிவித்துள்ளது.
“யுத்தங்களில் அணுவாயுதங்களைப் பயன் படுத்துவதில்லை என்ற ஒருமித்த கருத்து உருவானதில் இந்த அமைப்பு பெரும்பங்கு வகித்தது” என நோர்வே நோபல் குழுவின் தலைவர் Jørgen Watne தெரிவித்துள்ளார்.

Hibakusha என்ற அமைப்பு 1945ம் ஆண்டில் நடந்தேறிய பெரும் அணுசக்தி தாக்குதல்களுக்கு பதிலளிக்கும் விதமாக செயல்பட்டு வருகிறது. அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் பேரழிவு மற்றும் மனிதாபிமான விளைவுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த உலகளாவிய அணுசக்தி எதிர்ப்பு இயக்கமாக நின்று கடுமையாக உழைத்து வருகிறது.
ஹிரோஷிமா, நாகசாகியில் உயிர் தப்பியவர்களின் சாட்சியங்கள், அவர்களின் கதைகள், சொந்த அனுபவங்களை சேகரித்தல் Hibakusha அமைப்பின் முக்கிய பணியாகும்.
அத்துடன் உயிர் தப்பியவர்களையே உலகின் பல பாகங்களுக்கும் அனுப்பி அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் தாக்கங்கள் துன்பங்களை இந்த அமைப்பு வெளிப்படுத்தியும் பகிர்ந்தும் வருகிறது.

பல நவீன அணு ஆயுதங்கள் பல்வேறு தரப்புக்களாலும் உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது. பல நாடுகள் அணு ஆயுதங்களைப் பெறத் தயாராகி வருவதாகத் தோன்றுகிறது, மேலும் நடந்து கொண்டிருக்கும் போர்களில் அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கான அச்சுறுத்தல்கள் உள்ளன. அணு ஆயுதப் போர் மனித உயிர்களை அழிப்பதோடு, வளங்களையும், மனித நாகரிகத்தையும் கூட அழித்துவிடும். போர்ச்சூழல் நிறைந்த இக்கால கட்டத்தில் இவ்வாறான அமைப்புக்களின் பணிகள் முக்கியமானவை என்பதற்காக 1956ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட Nihon Hidankyo (Hibakusha) அமைப்பு 2024ம் ஆண்டின் அமைதிக்கான நோபல் விருத்தினை பெற்றுக்கொள்ளுகிறது.




2024 இலக்கியத்திற்கான நோபல் பரிசு தென் கொரியவை சேர்ந்த Han Kang என்ற எழுத்தாளருக்கு வழங்கப்படவுள்ளது என ஸ்வீடன் அகாடமி Stockholm இல் அறிவித்துள்ளது. தென் கொரியாவில் உள்ள Gwangju என்ற நகரைச் சேர்ந்த 53 வயதுடைய Han Kang அவர்கள் "சிறந்த கவிதை உரைநடை"க்காக இப்பரிசைப் பெறுகிறார்.

நோபல் இலக்கிய விருதைப் பெறும் முதல் தென் கொரிய எழுத்தாளர் Han Kang ஆவார். 2016ஆம் ஆண்டு வெளியான ''The Vegetarian'' என்ற இதழ் மூலம் இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்டவர்.
இதற்காக 2016இல் சர்வதேச Man booker என்ற விருதை பெற்றவர்.
இவரது இலக்கியப் படைப்புக்கள் உலக வாழ் மக்களின் பாதிப்புக்களை வெளிப்படுத்தும் தீவிர கவிதை உரைநடையினைக் கொண்டது என்பதே நோபல் இலக்கியக் குழுவின் கவனத்தை ஈர்த்துள்ளது.

கடந்த ஆண்டு இலக்கியத்துக்கான நோபல் பரிசு நோர்வே எழுத்தாளர் Jon Fosse அவர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த ஆண்டு ஸ்வீடிஷ் அகாடமியின் செயலாளர் Mats Malm- Han Kang (53) அவர்களை தகமையுடையவராக அறிவித்தார். □




**க**விதா சிவகணேசன் 12.09.2024 அன்று காற்றோடு கலந்து போனார்.

வாழ்க்கைச் சக்கரத்தில் இறப்பு என்பது பிணைக்கப் பட்டதுதான் இருந்தாலும், சிலரது இழப்புக்கள் சுற்றத்தால் ஈடு செய்ய முடியாது இருக்கிறது. சமூகத்தில் அவர்களது வெற்றிடங்கள் நிரப்பப்படாது போய்விடுகிறது. அவ்வாறான ஒன்றுதான் கவிதாவின் மரணமும்.

சிறந்த நடன கலைஞரான கவிதா சிவகணேசன் 02.04.1967 நாளன்று யாழ்ப்பாணம் குரும்பசிட்டி மண்ணில் பிறந்து யாழின் நாட்டிய ஆசிரியர்களான லீலா ஆறுமுகையா, நளினி சிவகுமாரன் ஆகியோரிடம் நடனக் கலையைக் கற்றதோடு, தமிழ்நாட்டில் உள்ள அடையாறு நடனக் கல்லூரியில் நடன நுட்பங்களைப் பயின்று, “நாட்டிய விசாரதா” எனும் பட்டம் பெற்று தாய்நாடு திரும்பினார். யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலை பிரிவில் நாட்டியத் துறையில் தனது இளநிலைப் பட்டப்படிப்பை நிறைவு செய்தார்.

1994ஆம் ஆண்டில் நோர்வே நாட்டுக்கு குடிபெயர்ந்து தான் கற்ற அற்புதமான கலையை அடுத்த சந்ததியினருக்கும் கொடுக்க வேண்டும் என முனைப்போடு அயராது உழைத்தவர். குறிப்பாக, பேர்கன் நகரில் நாட்டிய கலைக்கூடம் ஒன்றினை ஆரம்பித்து ஏராளமான சிறுவர், இளையோருக்கு பரதநாட்டிய கலையைக் கற்பித்து அவர்களையும்

**நாட்டிய விசாரதா, நாட்டிய வாணி**
**அமரர் கவிதா சிவகணேசன்**



மிகச்சிறந்த நாட்டிய கலைஞர்களாக உருவாக்கியவர்.

பேர்கன் நகரில் அன்னைபூபதி கலைக்கூடம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து தனது இறுதிக் காலம்வரை நடன ஆசிரியையாக பணியாற்றியவர். தனது கலைக்கூடத்தினால் மிகச்சிறந்த நடனக் கலை ஆற்றுகைகளை அரங்கேற்றியவர்.

மாவீரர் நிகழ்வுகளில் தனது நாட்டியக் கலைத்திறன் மூலம் தாயக விடுதலையையும் மாவீரர்களின் தியாகத்தினையும் எடுத்தியம்பும் சிறந்த நிகழ்வுகளை அரங்கேற்றி எமது மக்களிடம் குறிப்பாக இளையோரிடம் நாட்டுப்பற்றினை விதைத்தவர்.

இன்னும் ஒளி விழா, பொங்கல்விழா போன்ற நிகழ்வுகளிலும் தனது மாணவர்களை நெறிப்படுத்தி பல நாட்டிய நிகழ்வுகளை அரங்கில் தந்தவர்.

2015ம் ஆண்டில் Vannkanten காலசார மண்டபத்தில் திருமறைக் கலாமன்றம் நோர்வே கிளையினால் நடாத்தப்பட்ட கலைமாலை நிகழ்வில் அமரர் கவிதா சிவகணேசன் தனது கலைக்கூடத்தினால் ஏராளமான மாணவர்களை இணைத்து, தானும்



அரங்கில் அமர்ந்திருந்து சிறந்த இசை, நடன நிகழ்வினை வழங்கியிருந்தார்.

நிகழ்ச்சி முடிவில் அவர் என்னை தனியாக அணுகி, இந்த நிகழ்வு யாழ் திருமறைக் கலா மன்றத்துக்கானது என்பதனால் ஏராளமான பிள்ளைகளை இணைத்து இந்நிகழ்ச்சியை ஒழுங்கு செய்தேன் என்றார். நான் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்து கொண்டேன்.

அண்மையில் அவர் கடும் நோயினால் மரணத்தை எதிர்கொண்டிருந்த போது தனது தாய் நாட்டு நினைவுகளை மீட்டும் வேளை "நான் நளினி ஆசிரியரிடம் பரதக்கலை கற்கும் போது யாழ் திருமறைக் கலாமன்ற அரங்கில் பல தடவைகள் நடனம் ஆடியிருக்கிறேன், திருமறைக் கலாமன்றம் மதம் கடந்து, சகல மதங்களையும் ஒன்றிணைத்து கலைக்காக செயற்பட்டு வருகிறது" எனக் குறிப்பிட்டிருந்தார்.

கலைக்கென தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த சகோதரி கவிதா சிவகணேசன் அவர்களுக்கு எமது இதய அஞ்சலியை செலுத்தி நிற்கின்றோம்.

-யூலியஸ் அன்ரனி-







# பாலு

## பத்து ஆண்டுகள்

## நினைவேந்தல் குறிப்பு


அமரர் அந்தோனிப்பிள்ளை எட்வேட்

**பாலு** என எல்லாராலும் மரியாதையோடும் அன்போடும் அறியப்பட்ட அமரர் அந்தோனிப்பிள்ளை எட்வேட் அவர்களை நான் கண்டதில்லை, ஆனால் அவரைப்பற்றி நிறைவாக எனது காதும் மனமும் குளிர கேட்டு அறிந்திருக்கின்றேன். இவருடைய சொந்தங்களின் வீடுகளில் மட்டுமல்ல மாறாக பேர்கனில் உள்ள அனேக தமிழருடைய வீடுகளில் முகமலர்ந்த புன்னகையோடும் இன்முகத்தோடும் இவரது புகைப்படத்தை கண்டு அதிசயித்துள்ளேன். ஏனெனில், மேற்குலக கலாசாரத்தில் முக்கியமான, மிகவே சொற்ப படங்களையே வீடுகளில் பார்க்கலாம். அதிலும் இறந்தவர்களின் படங்கள் அரிதாகவே காணப்படும். இன்னும், தங்களை விட்டுச்சென்ற சொந்தங்களின் படங்களை மட்டுமே வைத்திருக்கும் வீடுகளில் விதிவிலக்காக, தனித்துவமாக இவரது படம் அனேகருடைய இல்லங்களில் காணப் படுகின்றதென்றால், ஏதோ ஒரு விதத்தில் அமரர் பாலு அனைவரையும் தனது உறவாகக் கொண்டிருந்தார் என்பதே உண்மை.

இவர் தனது இனம், சனம் என்ற வட்டத்துக்குள்ளே தன்னைக் கட்டுப்படுத்தாது, பரந்துபட்டு அனைவ-ரோடும் நட்பு பாராட்டுகின்ற ஒருவராக இருந்துள்ளார் என்பது பலருடைய அனுபவமாகவும் சாட்சியாகவும் இருக்கின்றது. தன்னைச்சார்ந்த ஒட்டுமொத்த சமூகத்துக்கு பாரபட்சம் காட்டாத சமூக ஆர்வலராக இருந்துள்ளார் என்பதும் பேர்கன் புனித பவுல் ஆலயத்தில் அனைவ-ரையும் அரவணைக்கும் பண்புள்ள கத்தோலிக்கனாக







இருந்துள்ளார் என்பதையும் சொல்லக்கேட்கும் போது அவ்வாறானவர்கள் இன்று எமது கத்தோலிக்க சமூகத்தில் அரிகிப்போவது வேதனையையும் அங்கலாப்பையும் ஏற்படுத்துகின்றது.

பேர்கன் புனித பவுல் ஆலய பொது நிர்வாகத்தில் அங்கத்தினராக சேவை ஆற்றியதோடு தமிழ் கத்தோலிக்க குருக்கள் பேர்கனில் இல்லாத காலப்பகுதியில் கத்தோலிக்க ஒன்றியத்தை திறம்பட நடாத்திய கட்டுக்கோப்பான பாங்கும் இவருக்கே உரியது. குருக்களை மதிப்பதிலும், உபசரிப்பதிலும், அவர்களுக்கு பக்க பலமாக இருந்ததிலும் இவர் தான் கற்றுக்கொண்ட கத்தோலிக்க பாரம்பரியத்தை எண்பித்தார்.

இவரது வள்ளல் தன்மையால் பலன் பெற்றோர் அனேகர், தன்னிடம் இல்லாத போதும் பிறரிடம் பொருள் பெற்று இவர் உதவி செய்தோர் எம்மிடையே உளர். இவரிடம் உதவிபெற்ற சிலர் இவரை ஏமாற்றியதையும், இவரது இறப்பிற்கு பின்னர் தாம்பட்ட கடன்களை மீளளிக்காமல் இவரது தன்னலமற்ற பண்புக்கு ஊறு விளைவித்ததையும் கேட்கும் பொழுது மனம் கனக்கின்றது.

“நீதி மான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன. கடுந்தொல்லை எதுவும் அவர்களைத் தீண்டாது. அறிவிலிகளின் கண்களில் இறந்தவர்களைப்போல் அவர்கள்



தோன்றினார்கள். நீதிமான்களின் பிரிவு பெருந்துன்பமாகக் கருதப்பட்டது. அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்து சென்றது பேரழிவாகக் கருதப்பட்டது. அவர்களோ அமைதியாக இளைப்பாறுகிறார்கள்.” (சாலமோனின் ஞானம் 3:1-3)

ஆண்டவரே, அமரர் அந்தோனிப்பிள்ளை எட்வேட் அவர்களின் ஆன்மா நித்தியத்துக்கும் உம்மில் இளைப்பாறட்டும்.

**அருட் தந்தை றெனி பீஷ்மன்** (அ.ம.தி)
ஆன்மீக குரு
பேர்கன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீக பணியகம் □



# நேர்காணல்

## இளையோர் பற்றிய நிலைப்பாட்டை நாங்கள் ஆழமாகப் பார்க்க வேண்டும்.

அருட்தந்தை கலாநிதி யாக்கோப் ரமேஷ் (அ.ம.தி)

-யூலியஸ் அன்ரனி-

அருட்தந்தை கலாநிதி யாக்கோப் ரமேஷ் (அ.ம.தி)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு முள்ளியான் பகுதியில் பிறந்து, கத்தோலிக்க குருவாகி, அமல மரித்தியாகிகள் சபையினால் சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகத்தின் இயக்குனராக பணியாற்றி வருபவர். க.போ.த உயர்தர கிறிஸ்தவ நாகரிக பாடத்திட்ட புத்தகங்களை எழுதுபவர். மாணவர்கள், ஆசிரியர்களுக்குரிய கருத்தமர்வுகளை நடாத்துபவர், அ.ம.தி சபையின் பொறுப்பாளரின் ஆலோசகராகவும் பணியாற்றுபவர். அத்துடன் ஊடகங்கள் வழியாக கிறிஸ்தவ சிந்தனைகளை வழங்கி வருபவர்.

?: வணக்கம் அருட்தந்தையே, உங்களை எமது நோர்வே பேர்கன் தேன் தமிழ் இதழின் கலையகத்துக்கு வரவேற்றுக் கொள்ளுகிறோம்.

!: உங்களுக்கும், அன்பான புலம்பெயர் உறவுகளுக்கும் வணக்கம்.
போர்க்காலத்திலும் சரி, அதன் பின்னரும் சரி தாயக மக்களது பயணத்தில் மிகவும் நெருக்கமாக கைகோர்த்தவர்கள் புலம்பெயர் உறவுகள்தான். உண்மையாகவே நான் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். புலம்பெயர் உறவுகளின் நெருக்கமான உறவும், அவர்களது உதவிகளும், தட்டிக் கொடுப்பும் தான் இன்று தாயகத்தில் வாழுகின்ற மக்களின் வாழ்வாதாரத்தை கொண்டு போவதற்கும், தங்களுக்குள் நம்பிக்கையோடு வாழ்வதற்கும் முக்கியமான ஆதாரமாக இருக்கிறது. அதற்கு நான் முதலில் நன்றி கூறிக்கொள்கிறேன்.

?: தாயகத்தில் வாழும் எமது இளையோரின் இன்றைய வாழ்நிலை எவ்வாறு இருக்கிறது?

!: இன்றைய இளையோர் பற்றிய நிலைப்பாட்டை நாங்கள் ஆழமாகப் பார்க்க வேண்டும். நாங்கள் அதை சில பகுதிகளாகக் கூடப் பிரித்துப் பார்க்கலாம்.

முதலாவதாக போருக்குப் பின்னர் எமது இளையோர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டு, கிராமங்களில் குடியேற அனுமதிக்கப்பட்ட பிற்பாடு, அவர்களது வாழ்வு ஆரம்ப வாழ்வோடு தொடரப்பட்ட வாழ்வாக காணப்பட்டது. அது ஓரளவு நேர்த்தியாகவும் இருந்தது. அந்த இளையோர் இன்று குடும்பங்களுக்குள்ளாகி தமது வாழ்க்கையை ஆரம்பித்து விட்டார்கள்.

2020ஆம் ஆண்டுக்குப் பின்னர் என்று பார்த்தால், எமது இளையோரின் வாழ்வு பெரியதொரு கேள்விக்குறிதான் போட வேண்டிய நிலையில் உள்ளது.

கா.பொ.த உயர்தர மாணவர்களின் நிலையைப் பார்த்தால் எமது வடமாகாணம் ஒன்பதாம் மாகாணமாக காணப்படுகிறது. முன்னைய காலத்தில் எமது மாகாணம் கல்வியில் எந்த இடத்தில் இருந்தது என்று நமக்குத் தெரியும். இன்று கல்வியில் இவ்வளவு தூரம் பின் தங்கியுள்ளோம் என்றால் அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். யுத்தத்தின் விளைவுகளை அவர்கள் சுமந்து கொண்டு இருக்கலாம். பெற்றோர் பிள்ளைகள் இடையிலான உறவுநிலை காரணமாக இருக்கலாம். திட்டமிட்டு



80களில் எமது இளைஞர்களைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து, அடைக்கப்பட்டு வாதைகள் செய்த வதைமுகாம். குருநகர் ஐந்து மாடிக் கட்டிடம். இப்போது மக்களின் குடியிருப்பு.

எமது தமிழ் மக்கள் மத்தியில் பிரச்சினைகளை உருவாக்கும் தீய சக்திகளின் சதிகள் காரணமாக இருக்கலாம். இவற்றினால் அவர்களது வாழ்வு மாறுபட்டு இருக்கலாம்.

2020க்குப் பின்னர் இளையோரின் வாழ்வை மகிழ்ச்சியாக காணவோ, ஏற்றுக்கொள்ளவோ முடியாத வாழ்வாகத்தான் இருக்கிறது. அதில் முதலாவது விடயம் அவர்களிடையே உள்ள போதைவஸ்து பாவனை.



அவர்கள் பல வித்தியாசமான போதை வஸ்துகளுக்கு அடிமையாகி உள்ளனர். உயர்தர மாணவர்களின் ஒன்றுகூடல்களில் அவர்கள் போதை வஸ்துக்களை பாவிப்பதை காண முடிகிறது. அது மகிழ்ச்சியாக தொடங்கி பின்னர் அதனுள் மூழ்கி, அதனால் அவர்களது சுயசிந்தனையை இழந்து விடுகிறார்கள். பெற்றோரின் கஷ்டங்களை உணராது தமது விருப்பத்துக்காக பெற்றோரை வதைக்கும் இளையோரும் உள்ளார்கள். போதைக்காக தன் தாயைக் கொன்ற செய்தி கூட வடமாகாணத்தில் நடந்திருக்கிறது. குடும்பத்திலேயே பல தீய செயல்கள் உருவெடுத்திருக்கிறது. போதையினால் விபத்துகள் நடந்து உயிரிழப்புகள் நடக்கிறது. விபத்துக்களில் அங்கங்களை இழந்த இளையோர் அதிகமாகக் காணப்படுகிறார்கள்.

?: இதுவரை நீங்கள் குறிப்பிட்ட விடயம் தொடர்பாக புலம்பெயர் உறவுகளுக்கு என்ன கூறுவீர்கள்?

!: தாயகத்திலுள்ள உங்கள் உறவினர்களுக்கு அத்தியாவசிய தேவை எவை என்பதில் நீங்களும் கருத்தாயிருங்கள். அவர்களுக்கு மிதமிஞ்சிய உதவிகளைப் புரிவதை தவிர்த்துக் கொள்ளுங்கள். புலம்பெயர் உறவுகளின் உதவியில்தான் பலர் புதிய நவீன மோட்டார் வாகனங்களை வாங்கி அதி வேகமாக ஓட்டி தங்களை அழிப்பதோடு மற்றவர்களின் உயிர்களையும் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். உங்கள் உதவியை வைத்துக் கொண்டு அவர்கள் தமது வாழ்வை எவ்வாறு உயர்த்துவார்கள் என்பதைக் கவனத்தில் வைத்துக் கொண்டு உதவி செய்யுங்கள். புலம்பெயர் மக்களாகிய நீங்கள் எவ்வளவோ கஷ்டங்களுக்கு மத்தியில் தாயக உறவுகளுக்கு உதவி புரிந்து கொண்டிருக்கிறீர்கள். ஆனால் அங்கு இந்த உதவிகள் பல வேளைகளில் அநியாயம் ஆக்கப்படுவதை காணும் போது மிகவும் வருத்தமாக இருக்கிறது.

வேலைவாய்ப்பு பிரச்சனை, பெரும் பிரச்சனையாக இருக்கிறது. தமிழர்களாகிய நாம் கௌரவம் பார்ப்பவர்கள். ஒரு சில வேலைகள் தான் நாம் செய்வோம் என்று நினைக்கும் இளையோர் பலர் உண்டு. இன்று அரசவேலைகள் மிகவும் குறைவு. வெளிநாடுகளில் படிக்கிற பிள்ளைகள் பகுதி நேரத்தில் வேலை செய்து தமது செலவீனங்களைத் தாமே நிவர்த்தி செய்வார்கள். ஆனால் தாயகத்தில் பல்கலைக்கழக மாணவர்களும் கல்வியை முடித்து வேலை கிடைக்கும் வரை பெற்றோரில் தங்கி வாழ்கிறார்கள். இது பெற்றோருக்கு பெரும் சுமையாக இருக்கிறது. வேலை இல்லாத காரணத்தால் பல இளையோர் மன உளைச்சலுக்கு உள்ளாகிறார்கள். இது குடும்பங்களில் பெரும் பிரச்சனைகளை ஏற்படுத்துகிறது.



?: இவ்விடயத்தில் ஆன்மிக மற்றும் சமூக பணியாளர் என்ற வகையில் நீங்கள் எவ்வாறான தீர்வு முயற்சிகளை முன்னெடுக்கிறீர்கள்?

!: இளையோரின் இந்த நிலையை மாற்றுவதற்கு எவ்வாறான திட்டங்களை எமது நிறுவனத்தால் மேற்கொள்ளலாம் என சிந்தித்த வேளையில், பெண்களுக்கு «Skills Development Training» அதாவது திறன் மேம்பாட்டு பயிற்சி, வருமானத்தை ஈட்டக்கூடிய தொழில் வளங்களை அவர்களுக்கு அறிமுகப்படுத்தி வருகிறோம். அதே வேளை இளைஞருக்கு தொழில்நுட்பம் சார்ந்து உதாரணமாக மின்சாரம், கட்டட தொழில் போன்ற பல தொழிற் கல்வியைக் கொடுத்து வருகிறோம்.

அடுத்தது பல இளையோரை வெளிநாட்டு மோகம் பாதிக்கிறது. அதற்கு வெளிநாட்டில் உள்ள உறவுகளும் காரணமாக இருக்கலாம். வெளிநாட்டவர்கள் அங்கு விடுமுறைக்கு வரும்போது நடந்து கொள்ளுகின்ற முறைமை, அங்குள்ளவர்களுக்கு வெளிநாட்டு ஆசையை ஏற்படுத்துகிறது. வெளிநாட்டுக்கு போய் விட்டால் எல்லாம் சரியாகி விடும் என்ற குறுகிய மனநிலை தாயகத்தில் பரவலாக காணப்படுகிறது. அதற்காக தமது காணிகளை விற்றும், கடன் வாங்கியும் கோடிக்கணக்கில் செலவிட்டு அது சரிவராது போகவே தற்கொலை செய்தவர்கள் பலரை நான் பார்த்திருக்கிறேன். எப்படி வெளிநாடு போகலாம் என சிந்திக்கும் இளையோர் பலர் இருக்கிறார்கள். இந்த ஆசை வந்த பின் அவர்கள் அங்கு எந்த வேலையும் செய்ய முயற்சிக்காது தமது இளமைக் காலத்தையும் இழந்து விடுகிறார்கள்.

போதைவஸ்து, வேலை இல்லாத் திண்டாட்டம் வெளிநாட்டு மோகம், இறுதியாக சில தீய சக்திகள் எமது தாயகத்திற்குள் ஊடுருவிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இளையோரின் மனநிலையை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். சமூக விரோதக் கும்பல்கள் இளையோரை இழுக்கிறார்கள். அதனால் அவர்கள் பெரும் வன்முறையாளர்களாக உருவாகி வருகிறார்கள்.

?: போருக்குப் பின்னர் இத்தனை மாற்றங்களா?

!: நான் குறிப்பிட்ட பிரச்சினைகளுக்குள் ஈடுபடுபவர்கள் 20 வீதமானவர்கள் தான். அதனைத் தாண்டி 80 வீதமான இளையோர் தமது கடமைகளைச் சரியாகப் புரிந்து வருகிறார்கள். நான் முதலில் எதிர்மறையான விளைவுகளைக் குறிப்பிட்டேன். இத்தனை சீர்கேடுகளுக்குள்ளும் முன்னேறி சாதனை படைத்தவர்கள் ஏராளமானவர்கள் நம் தாயகத்தில் உள்ளார்கள். வேலைவாய்ப்பு அற்றவர்கள் தமது பெற்றோரின் தொழில்களுக்கு உதவியாகவிருந்து தமது குடும்பங்களைக் கவனித்து வருகிறார்கள். மீன்பிடித் தொழில், விவசாயம், இன்னும் பல புதிய கண்டுபிடிப்புகளில் ஈடுபட்டு அதனால் முன்னேறுபவர்கள், கல்வியில் சாதிப்பவர்கள், விளையாட்டுத் துறையில் சாதிப்பவர்கள், தேசிய விளையாட்டுக் கழகத்திலும் எமது இளையோர் தற்போது விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு 80 வீதமான இளையோர் உள்ளனர். அவர்களைப் பார்த்து வளர்ந்து வரும் இளையோரும் முன்னேறிச் செல்வார்கள் என்பது எனது நம்பிக்கை.

?: எமது புலம்பெயர் உறவுகளோடு தாயகத்து முக்கிய நிலவரங்களை பகிர்ந்து கொண்டமைக்காக நன்றிகளை தெரிவிப்பதோடு, உங்களது சிறப்பான பணிகள் தொடர எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். □




**சு**ற்றுலாத்தலமாக்க தம்மிடம் தரும்படி இந்தியா(அம்பானி), சீனா கேட்டுக் கொண்டிருப்பது மட்டுமல்லாது, கடந்த ஆண்டு நடுப்பகுதியில் இரு தரப்பாரும் அடுத்தடுத்து வந்து இந்தத் தீவைப் பார்வையிட்டும் போனார்கள்.

1973இல் பறவைகள் சரணாலயமாக அன்றைய அரசால் அறிவிக்கப்பட்ட தீவு. கடலால் சூழப்பட்டது மட்டுமல்ல, தற்போது பல்லாயிரம் கிலோ பிளாஸ்டிக் கழிவுகளாலும் சூழப்பட்ட தீவுகளில் இதுவும் ஒன்று.

அனலைதீவு வடக்கு யா/37 கிராம அலுவலர் பிரிவினை சேர்ந்த ஒரு தீவு பருத்தித்தீவு ஆகும். இந்தச் தீவின் பரப்பளவு 9.71 ஹெக்ரேயராகும். இது பறவைகள் விலங்குகள் சரணாலயமாக 18.மே.1973இல் பிரகடனப் படுத்தப்பட்டது.

ஆயினும், இங்கே மூன்று நான்கு தலை-முறைகளாக தமக்கானதொரு புனித அந்தோனியார் சிற்றாலயம் ஒன்றை உருவாக்கி, கலைகளோடும், கடலோடும் வாழ்ந்து வந்த குருசுமுத்தப்பா என்பவரது குடும்பங்களை தீவின் கிழக்குக் கரையில் குடியிருக்கலாம் எனவும், பறவைகள் விலங்குகளுக்குத் தொந்தரவு செய்யக்கூடாது என்ற நிபந்தனையுடனும் அரச அதிகாரிகளால் அனுமதி வழங்கப் பட்டது.
பின்னைய யுத்த காலங்களில் (1990) இந்தக்



குடும்பங்களும் தீவினைவிட்டு வெளியேறி வெவ்வேறு இடங்களில் குடியமர்ந்து கொண்டனர். இவர்களால் வளர்க்கப்பட்ட வீட்டுப் பிராணிகளில் பத்துக்கும் மேற்பட்ட ஆடுகளின் வம்சாவழி “குதிரைகளோ இவை?” என வியக்கும் வகையில் இந்தக் காட்டுக் கற்குகைகளுக்குள் வாழ்ந்து வருகின்றன.
தீவின் மேற்குப் பகுதி மரச்செறிவுகளில் பலவகைப் பறவைகள் இனப்பெருக்கம் செய்து வருகின்றன.


தற்போது எந்த அன்னிய தேசத்தவர் இந்தத் தீவை அபகரித்துக் கொள்வார்களோ என்ற அச்சத்தில் தீவக மக்கள் இருக்கிறார்கள். புதிய அரசு நாட்டையும் கடலையும் கூறுபோட்டு அன்னிய சக்திகளுக்கு விற்க மாட்டார்கள் என்று நம்புவோமாக.




தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

சுதந்திர இலங்கையின் முதலாவது அரசியற்சதி 1962ம் ஆண்டு இடம்பெற்றது. அது மிக விரைவிலேயே தோற்கடிக்கப்பட்டாலும் கூட இலங்கையின் அரசியல் வரலாற்றில் முக்கியமான ஒரு புள்ளியை இந்த சதி குறிக்கிறது. இந்தச் சதியில் என்ன நடந்தது, அதற்கான காரணகர்த்தாக்கள் யார் போன்ற விடயங்கள் இலங்கையரசியலின் சில முக்கிய பரிமாணங்களை வெளிக்காட்ட வல்லவை. அவற்றை நோக்க முதல் குறித்த சதியை நோக்கி உந்தித்தள்ளிய காரணிகள் எவை, அக்காலப்பகுதியின் அரசியற் பொருளாதாரச் சூழ்நிலைகள் என்ன போன்றவற்றை விரிவாக நோக்குவது அவசியம்.


1962 ஜனவரியில் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் அரசாங்கத்தை கவிழ்க்க சிரேஷ்ட பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள் குழுவொன்று முயற்சித்தது. ஆட்சிக்கவிழ்ப்பில் பங்கேற்றவர்கள் மேற்கத்திய சார்பு கொண்ட நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் ஏன் ஒரு இராணுவச் சதியை நோக்கி உந்தப்பட்டார்கள்? இந்த வினாவுக்கு பெரும்பாலான ஆய்வாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விளக்கம் யாதெனில், அவர்கள் மதச்சார்பற்ற பன்மை அரசு என்ற அடையாளம் மாற்றமடைவதையும் அது அரசாங்கத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதையும் கண்டு பீதியடைந்தனர். புகழ்பெற்ற அமெரிக்க அரசறிவியல் பேராசிரியரான Donald L. Horowitz குறித்த சதி தொடர்பில் விரிவான ஆய்வை மேற்கொண்டு 1980ம் ஆண்டு "*Coup Theories and Officers' Motives: Sri Lanka in Comparative Perspective*" என்ற தலைப்பில் ஒரு நூலை வெளியிட்டுள்ளார். இச்சதி பற்றிய மிகவும் விரிவான தகவல்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.




கொலனித்துவக் கட்டுப்பாட்டின் மிக நீண்ட இடைவிடாத காலகட்டத்தை இலங்கை அனுபவித்தது.

1948இல் இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முந்திய 450 ஆண்டுகள் ஐரோப்பியரின் ஆதிக்கம் அவர்தம் செல்வாக்கிற்கும் நாடு உட்பட்டிருந்தது. கொழும்பில் மேற்கத்தியமயமாக்கப்பட்ட, ஆங்கிலம் பேசும்

குறுங்குழுவாத மேற்தட்டு வர்க்கம் உருவாகியிருந்தது. பெருமளவில் கீழ்நாட்டு சிங்களவர்கள், தீபகற்பத் தமிழ் மற்றும் டச்சுப் பறங்கியர்கள் இதில் இருந்தனர். அவர்கள் பொதுப் பள்ளிகளில் கல்வி மற்றும் சமூகமயமாக்கல் மூலம் ஒருங்கிணைந்த குழுவாக இணைக்கப்பட்ட ஒரு மேலாதிக்க வர்க்கமாக, இன அல்லது மத பின்னணியைப் பொருட்படுத்தாமல் நவீன மதச்சார்பற்ற தாராளவாத கண்ணோட்டத்தையும் பகிர்ந்து கொண்டனர்.



தேர்ந்தெடுக்கப்பட்ட ஆங்கிலத்தில் கல்வி கற்ற உயரடுக்கு குழுவானது அரசியல்ரீதியாக செல்வாக்குள்ளவர்களாக, கொலனிகளின் நலன்களை உறுதிசெய்வதனூடு தம் அரசியற் பொருளாதார நலன்களைப் பேணுவோராக இருந்தனர்.
இவர்களுக்கும் இலங்கையின் பெரும்பான்மை சமூகத்திற்கும் - கிராமப்புற மத அடையாளங்களைப் பேணுகிற - இடையே மிகப்பெரிய இடைவெளி இருந்தது.



இவ்வாறான ஒரு உயரடுக்கின் தோற்றம் இலங்கைக்கு மட்டும் உரித்துடையதல்ல. அனைத்து ஐரோப்பிய கொலனிகளிலும், கொலனித்துவவாதியின் பண்பாடு, மதிப்புகள் மற்றும் வாழ்க்கை முறையை ஏற்றுக்கொண்ட ஒரு உயரடுக்கு தோன்றியது. பிரிட்டிஷ் இந்தியாவில் ஜவஹர்லால் நேரு, முகமது அலி ஜின்னா ஆகியோர் பிரிட்டிஷ் வழிகளிலும் பலவற்றைப் பின்பற்றினாலும் மதச்சார்பின்மையின்மையில் உறுதியாக இருந்தனர். ஆனால் இலங்கையின் நிலைமை வேறாக இருந்தது. சிங்கள உயரடுக்குக் குடும்பங்களான பண்டாரநாயக்கா - ஒபேசேகரே - டி சேரம் போன்றவையும் சிங்கள கொவிகம உயரடுக்கின் கணிசமான பகுதியினரும் தமிழ் வேளாளர் உயரடுக்கின் சிலரும் கிறிஸ்தவ மதத்திற்கு மாறினார்கள். இதில் தமிழ் வேளாள உயரடுக்கினர் முன்னோடிப் பாத்திரம் வகித்ததும் அவர்களைப் பார்த்தே சிங்கள உயரடுக்கினர் மதம் மாறத் தொடங்கினர் என்பதும் கவனிப்புக்குரியது.



அலுவலகம், தொழில்கள் மற்றும் வணிக நிறுவனங்களில் தொழில்களை தொடர முடிந்த ஆங்கிலம் படித்த இலங்கையர்களுக்கும், சமூக வாய்ப்புகள் மற்றும் பொது அமைப்புகள் என்பன மிகவும் குறைவாக இருந்த சிங்கள அல்லது தமிழ் படித்த இலங்கையர்களுக்கும் இடையே ஒரு பெரிய இடைவெளி இருந்தது. இதனால் கொலனித்துவவாதிகளுக்காக தங்கள் மொழி, பண்பாடு, மதம் ஆகியவற்றைக் கைவிட்ட சிங்களவர்கள் மீது சிங்கள சமூகம் ஒரு குறிப்பிட்ட வெறுப்பைக் கொண்டிருந்தது. இது மெதுமெதுவாக சுதந்திரத்தின் பின் எதிர்ப்பாக வெளிப்படத் தொடங்கியது.



குறித்த உயர்தட்டு வர்க்கத்தின் அதிகாரம் எப்படிப்பட்டது

என்பதை ஓர் உதாரணம் மூலம் விளக்கலாம். 1950இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் நுழைந்த மாணவர்களில், மொத்த மாணவர்களில் நான்கில் ஒரு பங்கினர் ஆங்கிலம் தங்கள் வீட்டு மொழி என்று குறிப்பிட்டுள்ளனர். இதனிலும் முக்கியமாக 1925ஆம் ஆண்டு எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்க தனது 26 வயதில் ஒக்ஸ்போர்ட்டில் இருந்து திரும்பியபோது, அவருக்கு சிங்களம் பேசத் தெரியாது.

1948இல் சுதந்திரம் அடைந்தாலும் 1956 வரை பிரித்தானிய கொலனியாதிக்கம் கடைப்பிடித்த நடைமுறைகள் மாற்றமின்றித் தொடர்ந்தன. ஆனால் 1956இல் பண்டாரநாயக்கவின் வருகை சிங்கள சமூகத்தில் மட்டுமன்றி இலங்கையின் அரச கட்டமைப்பு, நிர்வாகம், நோக்கம் ஆகியவற்றை முழுமையாகப் புரட்டிப் போட்டது. மிகக்குறுகிய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தடாலடியான மாற்றங்கள் சிலருக்கு ஜீரணிக்க இயலாதவையாக இருந்தன.

**1956இல் பண்டாரநாயக்கவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான மக்கள் ஐக்கியமுன்னணியின் தேர்தல் வெற்றியானது, மேற்கத்திய மயமாக்கப்பட்ட உயரடுக்கினரின் தலைமையை அகற்றி, அவர்கட்குப் பதிலாக சிங்கள மொழி பேசும் ஒருவரைத் தலைமையாக மாற்றியமைக்கும் ஒரு சமூகப் புரட்சியாகக் கருதப்பட்டது.**

புதிய அரசாங்கம் சிங்களத்தை அரச கரும மொழியாக ஒரே இரவில் ஆக்கினாலும், பரந்த சிங்கள பௌத்த சமூகத்திற்கு அதன் பலன்கள் உடனடியாக வெளிப்படாது என்பதை பண்டாரநாயக்க அறிந்திருந்தார். ஏனென்றால், ஆங்கில மொழியின் உயரடுக்கு கிறிஸ்தவ பொதுப் பள்ளிகள் ஒரு நூற்றாண்டு காலமாக இயங்கிக் கொண்டிருந்தன. சுதேச மொழிப்பள்ளிகள் புதிது. எனவே மூத்த அரசு ஊழியர்கள், தொழில் வல்லுநர்கள், இராணுவ அதிகாரிகள் மற்றும் வணிக நிர்வாகிகள் என அனைவரும் ஆங்கிலம் பேசும் உயரடுக்கினராக இருந்தனர். எனவே சிங்களம் பேசும் புதிய நிர்வாகம் ஒன்றுக்கு காலமெடுக்கும்.

இதற்கிடையில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகளும் அதற்கான மறைமுக அரச ஆதரவும் ஆங்கில மொழிபேசும் கிறீஸ்தவ உயரடுக்கினருக்கு ஒரு எச்சரிக்கை மணியாக இருந்தது. 1958ம் ஆண்டு இடம்பெற்ற வன்முறையானது "இவ்வகைப்பட்ட ஆட்சியானது நிச்சயம் அகற்றப்பட வேண்டியது" என்ற முடிவுக்கு வருவதற்கான முதலாவது அடிப்படையைத் தந்ததாக 1962இல் சதியில் ஈடுபட்டதாக கைதாகியருந்த இராணுவ பொலிஸ் அலுவலர்கள் பேராசிரியர் ஹோரோவிட்ஸிடம் தெரிவித்திருக்கிறார்கள்.

தமிழருக்கு எதிரான வன்முறையானது அரசுக்கும் ஆங்கிலம் பேசும் கிறீஸ்தவ உயரடுக்கு பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் இடையிலான முரண்பாட்டின் தொடக்கப்புள்ளியாகும். குறிப்பாக இவ்வன்முறைகளில் பௌத்த மதகுருமாரின் பாத்திரமும் அதே நபர்களின் அரசியல் செல்வாக்கும் இவ்வதிகாரிகளுக்கு விசனத்தைக் கொடுத்தன.

பண்டாரநாயக்க பிரதமராகப் பதவியேற்றவுடன் 21 சி.ஐ.டி மற்றும் சிறப்புப் பிரிவு அதிகாரிகள் ராஜினாமா செய்தனர் அல்லது ஓய்வு பெற்றனர். அவர்களில் பாதிப்பேர் சிங்களவர்கள் அல்லாதவர்கள், பெரும்பான்மையானவர்கள் கிறிஸ்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1957இல், அரசிதழில் வெளியிடப்பட்ட காவல்துறை அதிகாரிகளின் நியமனங்களில் 29 சதவீதம் பேர் பறங்கியர்கள், சுமார் 65 சதவீதம் பேர் கிறிஸ்தவர்கள். பிரித்தானிய கொலனியாக இருந்த போதும் இலங்கை இராணுவத்தின் நிலைமை இவ்வாறானதாகவே இருந்தது. அக்காலத்தில் இராணுவத்தில் உள்ள அதிகாரிகளில் பாதிப்பேர் பறங்கியர்கள்.

இலங்கையின் பாதுகாப்புத் துறையில் கிறீஸ்தவ பறங்கியரின் ஆதிக்கத்திற்கு வரலாற்று ரீதியான காரணங்கள் உண்டு. 1902ஆம் ஆண்டு தன்னார்வத் தொண்டர்களின் ஒரு பகுதியாக மாணவர் பயிற்சிப் படையணி (Cadet Battalion) ஒன்று நிறுவப்பட்டது. இது ஆரம்பத்தில் ரோயல் கல்லூரியிலும், பின்னர் கொழும்பில் உள்ள கிறிஸ்தவ பொதுப் பள்ளிகளான சென்ட்தோமஸ், வெஸ்லி, டிரினிட்டி மற்றும் கண்டி கிங்ஸ்வுட் மற்றும் காலியில் உள்ள ரிச்மண்ட் ஆகியவற்றிலும் உருவாக்கப்பட்டது. பௌத்த மற்றும் இந்து பள்ளிகள் அஹிம்சையை கடைபிடிப்பதால் இந்தப் பயிற்சிப் படையணியை அறிமுகப்படுத்தவில்லை. 1949இல் இலங்கை இராணுவம் நிறுவப்பட்ட போது, பெரும்பாலும் இன மற்றும் மத சிறுபான்மையினரைச் சேர்ந்தவர்களே அதில் இணைந்தனர். பௌத்த பெற்றோர்கள் தங்கள் மகன்கள் இராணுவத்தில் இணைவதை விரும்பவில்லை. இதற்குக் கொல்லாமை என்ற புத்தரின் போதனை இதற்கு ஒரு காரணமாகலாம் என்று தனது ஊகத்தை பேராசிரியர் ஹோரோவிட்ஸ் முன்வைக்கிறார். "பண்டையகாலத்தில் மலாய்க்காரர்கள், சோனகர்கள், மலபார்கள், தமிழர்கள் ஆகியோரைக் கூலிப்படையினராக வேலைக்கு அமர்த்தும் பழங்கால பாரம்பரியம் சிங்களவர்களிடையே இருந்தது" என்று ஹொரோவிட்ஸ் கருதுகிறார். □

இங்கு முக்கியமானது யாதெனில் கிறீஸ்தவர்களுக்கு பெரும் செல்வாக்கு இருந்தபோதிலும், இலங்கையில் உள்ள புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்கள் எண்ணிக்கையில் குறைவானவர்களாக இருந்தனர், அவர்கள் சனத் தொகையில் ஒரு சதவிகிதத்தினரே. அதேவேளை ரோமன் கத்தோலிக்க சமூகத்தினர் ஏழு சதவிகிதத்தினர். இவர்களிற்கு எதிராக அதிகாரத்துக்கு காத்துக்கிடக்கும் பெரும்பான்மை பௌத்த பாதுகாப்பு அலுவலர்கள், நிர்வாகிகள் மதத்தின் அடிப்படையில் காய் நகர்த்தத் தொடங்கினர். இதை பதவிகளில் இருந்த கிறீஸ்தவர்கள் உணரத் தொடங்கினர்.

மூப்பின் அடிப்படையில் பொலிஸ்மா அதிபராகவேண்டிய பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு பிரதமர் பண்டாரநாயக்க சொன்ன செய்தி இதற்கு முத்தாய்ப்பாய் அமைந்தது. "நீர் பௌத்தராக இருந்தால் மட்டுமே என்னால் உம்மை பொலிஸ்மா அதிபராக நியமிக்க முடியும். கோவிகம சாதியைச் சேர்ந்த சிங்கள பௌத்தரையே மக்கள் பொலிஸ்மா அதிபராக விரும்புகிறார்கள்". பிரதமரின் இக்கூற்று சில விடயங்களை அறுதிபடக் கூறிற்று.

**சுதந்திரத்திற்குப் பிறகு, பௌத்த மதத்திற்கு அரச ஆதரவைப் பெறுவதற்கும், இலங்கையில் பௌத்தத்தின் "சரியான இடத்தை" அடையாளப் படுத்துவதற்கும், கிறிஸ்தவ மதப் பள்ளிகள் அனுபவிக்கும் நன்மைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் பௌத்தர்கள் மத்தியில் ஒரு இயக்கம் இருந்தது. பண்டாரநாயக்கவின் கொலையோடு "சுதேசிய நலன்" என்ற நிகழ்ச்சி நிரல் முடிவுக்கு வந்ததாகத் தோன்றியது.**

1960ஜுலையில் சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதில், சுதேசிய நலனை முன்னிறுத்தும் செயல்முறை முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. நடைமுறையில் இருந்த மதச்சார்பற்ற ஆங்கிலம் பேசும் உயரடுக்கினரின் அரசியல் நிர்வாகச் செல்வாக்கை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதில் புதிதாக அரசியல் செல்வாக்குப் பெற்ற கீழடுக்கினர் உறுதியாக இருந்தனர். வளர்ந்து வரும் சிங்கள-பௌத்த போர்க்குணத்திலும் பிக்குகளின் அரசியல் பாத்திரத்திலும் இது தெளிவாகத் தெரிந்தது. பௌத்த பிக்குவால் பிரதமர் கொல்லப்பட்டாலும்கூட அரசியலில் இருந்த பௌத்தத்தின் செல்வாக்கைக் குறைக்க இயலவில்லை. இப்பின்புலத்தில் மேற்கத்தியமயமாக்கப்பட்ட நடுத்தர வர்க்கம் ஒரு பன்மை பல இன அரசின் அஸ்தமனம் குறித்தும் அதன் இடத்தில் ஒரு பௌத்த இறையாட்சியின் தோற்றம் குறித்தும் அஞ்சியது.

இதற்கிடையில் அரசாங்கம் அதன் மொழிக் கொள்கையில் மாற்றங்களைக் கொண்டு வந்தது. 1961 ஜனவரியில் சிங்களம் நாட்டின் உத்தியோகபூர்வ மொழியாக மாறியது. இது சதியில் ஏற்படுத்திய செல்வாக்கை இலங்கையின் வரலாற்றை வரன்முறையாகப் பதிந்த பட்ரிட் பீரிஸ் தனது நூலில் *(The History of Sri Lanka)* பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

''சிங்கள கிறிஸ்தவர்களாக இருந்த இராணுவ அதிகாரிகள், தமது தொழில் வாழ்க்கைக்கு எதிர்காலம் இல்லை என்று கருதியதால் மொழிச் சட்டத்தின் கீழ் ஓய்வுபெற்றனர். பொலீசாரில் நான்கில் மூன்று பங்கு கிறிஸ்தவர்களாக இருந்தனர். இந்தப் பின்புலத்திலேயே 1962இல் பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள் ஆட்சி கவிழ்ப்பு முயற்சியை நடத்தினர். இங்கு கவனிக்க வேண்டியது யாதெனில் இந்த ஆட்சிக்கவிழ்ப்புச் சதி நிகழ்த்தப்பட்டது தமிழர்களால் அல்ல, ஆனால் சிங்கள கிறிஸ்தவர்களால்.''

## Aragalaya





தொடரும்



# கடலைக் குடிப்போம்

Dr. Mohamed Ali Yaseer Arafath

இலங்கையில் முதலாவது கடல்நீர் சுத்திகரிப்பு நிலையம் யாழ்ப்பாணம் தாளையடிபகுதியில் திறந்து வைக்கப்பட்டது. இதன்மூலம் இலங்கையின் முதலாவது Desalination Plant, 1881ஆம் ஆண்டில் Reliable Desalination Technology கண்டுபிடிக்கப்பட்ட போதிலும் 1928இல் நெதர்லாந்தில் முதன் முதலில் குராகோ கடல்நீர் சுத்திகரிப்பு நிலையம் போலவே யாழ்ப்பாணம் கிளிநொச்சி ஒருங்கிணைந்த குடிநீர் விநியோகம் திட்டமாக செயலுருவம் பெற்றது.



யாழ்ப்பாணம் இலங்கையில் ஒரு குட்டி டச்சுபிராந்தியம். யாழ்ப்பாணம் இன்னும் 150 வருடகால டச்சு ஆட்சியில் பெற்ற பல நன்மைகளை இன்னும் பெறுகின்றது. யாழ்ப்பாணம் டச்சுக் கோட்டை மட்டுமல்லாது, அதன் தனித்துவமான கல்விப் பாரம்பரியம், புகையிலைப் பயிர்ச்செய்கை, நில மீட்பு விவசாயம், நீர் முகாமைத்துவம் சார்ந்த உள்ளக நீரேந்துப் பகுதிகள், தேசவழமை சட்டம் தீவுகளின் பெயரீடு என்று மிகப்பெரிய பட்டியல் நீளும்.

எனினும் இலங்கையில் தற்போதைய நிலையில் அபிவிருத்தி அடைந்த நாடுகளே அதிக Operational Costs காரணமாக கைவைக்க தயங்கும் Desalting Plant இல் முதலிட்டமை பொருளாதார சமூக வாழ்வியல் முன்னுரிமைகளை அறியாமல் ஒருசில Oligarchy குழுக்கள் சேர்ந்து அரசியல் ரீதியாக தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களை வகுத்து அவை வெற்றியளிக்காது போக அதை ஒட்டுமொத்த இலங்கை மக்களின் தலையில் கட்டி விடுவதுதான் இங்கே வாடிக்கை.

வேடிக்கை என்னவென்றால் இவர்கள் யாழ்ப்பாணம் எதிர்நோக்கும் பாரிய நீர் மாசடைதல் மற்றும் நிலத்தடி நன்னீரில் உவர்நீர் பரவல், அடிப்படை குடிநீர் மற்றும் விவசாய தேவைகளை விட்டுவிட்டு, மிகப் பெரிய கடன் தொகையில் பிரான்சு அபிவிருத்தி வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியில் இருந்து பெற்ற 266 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவழித்து அதிக உற்பத்தி செலவு கொண்ட இந்தத் திட்டத்தை நிறைவேற்றி அதைத் திறந்து வைத்து இருக்கிறார்கள்.

ஆரம்பம் முதல் எதுவிதமான நீண்ட கால இலக்கும்

இல்லாமல் குறுகிய பிரதேசவாத சாக்கடையில் இருந்து அரசியல் செய்து பேரினவாதத்தினை முறையாக, தர்க்கரீதியாக, ராஜதந்திர ரீதியாக, சாதுர்யமாக எதிர்கொள்ளத் தெரியாமல் வெறும் பூச்சாண்டியாக காண்பித்து மக்களை மடையராக்கி வழமையாக வாக்குகளை அள்ளும் நிரந்தர கொள்கையற்ற சிறுபான்மை அரசியல் முகவர்கள் பிரதேசவாத அரசியலில் இந்த இரணைமடுவை மையப் புள்ளியாக கொண்டு யாழ்ப்பாண கிளிநொச்சி முல்லைத்தீவு வவுனியா மற்றும் மன்னார் மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் செய்திருக்க வேண்டிய நீர் வள மற்றும் விவசாய புரட்சி காயடிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண குடாநாட்டில் நிலக்கீழ் நீர்ப் படுக்கை படிப்படியாக உவர் நீர் மயமாவது அந்த மாவட்டம் எதிர்நோக்கும் மிகவும் முக்கியமான பிரச்சனை இதற்கான தீர்வு தொண்டமானாறு மற்றும் யாழ் உள்ளக நீரேந்துப் பகுதிகளை படிப்படியாக நன்னீர மயப்படுத்துவதே. இதற்காகவே மஹாவலி நீரை திசைதிருப்பும் கோரிக்கை ஆரம்பகால யாழ் அரசியல் தலைவர்களால் பிரித்தானிய ஆட்சியின் போது முன்வைக்கப்பட்டது.

அதனை பிரித்தானிய அரசு ஏற்ற போதும் இரண்டாம் உலகமகா யுத்தம் மற்றும் சுதந்திர கோரிக்கை குழப்பங்கள் காரணமாக நடைபெறவில்லை எனினும் 1960களில் UNDP மற்றும் FAO செய்த விரிவான ஆராய்ச்சிகளின் பயனாக சிவனொளிபாதம் முதல் அம்பன் கங்கை - ருளு வெவ - மகாகனதராவ- வவுனியா - சேமமடு ஊடாக கனகராயன் ஆறு இரணைமடு தாண்டி யாழ்ப்பாண நன்னீர் ஏரித்திட்டம் உட்பட பருத்தித்துறை வரை விரியும் தெற்காசியாவின் மிகச் சிறந்த பல்நோக்கு அபிவிருத்தி திட்டம் அவர்களால் முன்மொழியப்பட்ட போது அதில் அப்போதைய இலங்கை தேவையினைவிட அதிகமான 507 மெகாவாட் மின்சாரம் மற்றும் அண்ணளவாக ஒரு மில்லியன் ஏக்கர்கள் ஆண்டு முழுவதும் முப்போக நீர்ப்பாசனம் செய்யும் முழு திட்டத்தையும் நிறைவேற்ற அண்ணளவாக 560 கோடி இலங்கை ரூபாயில் (1968 estimate) 12 வருடகாலம் அதாவது 1980 களில் இந்த திட்டம் நிறைவேற்றப்பட்டு மத்திய இலங்கையின் அபரிமிதமான நீர்வளமும் வட இலங்கையின் அபரிமிதமான நிலவளமும் மானுட வளமும் சேர்ந்து இலங்கை அப்போதே 1980 களில் இலங்கையில் விவசாய - கைத்தொழில் உற்பத்தி புரட்சியை உருவாக்கி சாதனை தேசமாக மாற்றியிருக்கும் ஆனால் மாறி மாறி வந்த அரசுகள் செய்தது என்ன?

டட்லி சேனநாயக்கா மிகவும் ஆர்வத்துடன் இந்த திட்டத்தை செயற்படுத்த முனைந்த போதும் 1970இல் ஆட்சி மாற்றம் நிகழ்கிறது. அந்த திட்டம் Downsizing செய்யப்படுகிறது. இந்த திட்டத்தின் பின்னால் ஏதோ நிகழ்ச்சி நிரல் இருக்கிறது என்ற அனுமானம் காரணமாக இடதுசாரி அரசியல் பள்ளி மற்றும் சிங்கள தேசியவாத பள்ளிக்கு இடையில் நின்ற just SSC qualified சிறீமாவோவின் தூர நோக்கு இன்றிய தீர்மானம் காரணமாகவும்சிங்கள குடியேற்றம் மற்றும் பேரின வாத நிகழ்ச்சி நிரலுக்கு பலியாகி இறுதியில் 100கோடி ரூபாய் மற்றும் முப்பது வருட Time Horizon மற்றும் முற்றாக புறக்கணிக்கப்பட்ட வடக்கு நீர்ப்பாசன திட்டங்கள் என முழுமையாக Down Regulate செய்யப்பட்ட இனவாத நிகழ்ச்சி நிரல்களின் கருவியாகி அதன் முழு பயனை தாராது குறைப்பிரசவமாய் உருவானதே மஹாவலி திட்டம்.



அதன் ஆரம்ப படியே பொல் கொல்லை அம்பன்கங்கை Water Diversion திட்டத்தை தொடங்கியது. அதன் பின்னர் வந்த காமினி திசாநாயக்க இந்த தொய்வுநிலையை சமன் செய்ய துரித மஹாவலி திட்டமாக மாற்றி கொத்மலை அணை வெடிப்பைப் போலவே இந்தத் திட்டமும் அவசர அவியலாகி போனது. ஆனால் பிழையான அமுல்படுத்தல் காரணமாக தேசமே தோற்று நிக்க இந்த திட்டத்தில் வென்றது பேரினவாத நிகழ்ச்சி நிரல் மட்டுமே. இதனால் மஹாவலி என்ற பெயரை கேட்டாலே வடக்கு அரசியல்வாதிகள் ஒவ்வாமை அரசியல் செய்ததன் விளைவே ஒட்டு மொத்த வட மாகாணமும் ஒரு பொன்னான வாய்ப்பு இழந்ததை கூட உணர முடியாமல் அதிக விலை கொடுத்து கடல் நீரை வாங்கி குடிக்க போகிறது. யாழ்ப்பாணம் மக்களுக்கு தரமான குடிநீர் நீர் கிடைக்க வேண்டும்

ஆனால் அது Sustainable Cost effective ஆனதாக இருக்க வேண்டும். Sustainability இல்லாத இந்தத் திட்டம் மற்றும் காலநிலை மாற்றம் காரணமாக உலகில் உருவாகும் நீரவட்ட சமநிலை குழப்பத்தில் இலங்கையில் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவம் எந்த திசையில் செல்ல வேண்டும் என்பதை அடுத்த இதழில் ஆராய்வோம். ☐







ஓட்டப் பந்தயத்தில் தன்னிடம் தோற்றுப்போன முயலை மீண்டும் ஒரு நாள் சந்தித்தது ஆமை.
உடனே, "இன்னொரு தடவை உன்னை ஓட்டப் பந்தயத்தில் வெல்ல வேண்டும் வருவாயா?" என்று கேட்டது.
அதற்கு முயல், "அதுதான் நீங்கள் வென்று விட்டீர்களே, இன்னொரு தடவை எதற்கு?" என்று கேட்டது.
"மீண்டும் உன்னை வெல்ல வேண்டும் அப்போதுதான் நான் எனது வெற்றிகளை மேலும் பெருமையாகச் சொல்ல முடியும்" என்று ஆமை சொன்னது.

ஆமையாரின் தற்பெருமையைக் கண்டு முயல் கோபம் கொள்ளாமல், "சரி, போட்டிக்கு வருகிறேன் ஆனால் ஒரு நிபந்தனை" என்றது முயல்.
"என்ன நிபந்தனை?" என்று கேட்டது ஆமை.
"கடந்த ஓட்டப் பந்தயம் தரையில் நடந்தது, இந்தப் பந்தயத்தைக் கடலில் நடாத்துவோம்" என்றது முயல்.

ஆமைக்குச் சிரிப்பு வந்தது. "தரையிலேயே என்னை வெல்ல உன்னால் முடியவில்லை, நீரில் எப்படி என்னை வெல்ல முடியும் முயலாரே...?, நீருக்குள் எனக்கு வேகம் அதிகம் என்பதை நீ அறிய மாட்டாயா?" என்று ஆமை கேட்டது.

"அறிவேன் அண்ணா, நிலத்திலும் நீரிலும் வென்ற பெருமை உங்களுக்குக் கிடைக்கும் அல்லவா" என்றது முயல். ஆமையும் அதற்குச் சம்மதித்தது.

கடற்கரையில் நின்ற கடற்புறா ஒன்றை நடுவராக வைத்து ஆமையும் முயலும் நீரில் இறங்கி அக்கரைக்கு நீச்சலடிக்கத் தொடங்கின.

சிறிது நேரத்திலேயே ஆமை நீண்ட தூரம் வந்து விட்டது. திரும்பிப் பார்த்தது. முயல் வெகு தொலைவில் மெல்ல மெல்ல நீச்சலடித்துக் கொண்டிருந்தது. பொழுது மறைந்தாலும் முயல் வந்து சேரப் போவதில்லை என எண்ணிக்கொண்ட ஆமை, கடலின் நடுவே இருந்த பாறை ஒன்றின் மீது ஏறி அமர்ந்து கொண்டது. கண்ணயர்ந்து தூங்கியும் போனது.

ஆமை கண் விழித்துப் பார்த்தபோது காலை வேளையாக இருந்தது. அக்கரையை சென்று அடைவதற்கான மீதித் தூரத்தையும் ஆமை நீந்திக் கடந்தது.

கரைக்குச் சென்ற ஆமைக்கு அதிர்ச்சியாக இருந்தது. ஏனெனில் அக்கரையில் முயலும் கடற்புறாவும் ஆமையின் வருகைக்காகக் காத்திருந்தன.
முயல் இடைவிடாது இரவிரவாக நீந்திக் கரையேறியதை அறிந்த ஆமை வெட்கம் அடைந்தது.
வெற்றி அடைந்து விட்டால் தலைக்கனம் கொள்ளக் கூடாது என்பதை ஆமை கற்றுக் கொண்டது. □

Bergen Tamilsk Avis
Ansvarlig redaktør: Julius Antonipillai - Adresse: Krohnegården 5b, 5146 Fyllingsdalen.- Telefon: 924 636 74
E-Post: ttoosai@gmail.com / antonipillai@hotmail.com Org.nr: 926 840 320 - ISSN: 2703-8440
VIPS: 729129 - Konto: 3626 31 78585 (Print ISSN: 2703-8785)